**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் - 2011**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி ஒழுகாமை

| | |
|---|---|
| (அ) இ.க.நி. இல. 05 | ரூபா 4,689,642 மொத்தப் பெறுமதியுடைய பயன்படுத்தப்படாத மூலப்பொருட்களும் விற்பனைசெய்யப்பட முடியாத அப்பியாசக் கொப்பிகளின் இருப்புக்கள் முடிவடைந்த பொருட்களில் உள்ளடங்கியிருந்ததுடன் அந்த இருப்பின் பெறுமதியை நியமத்திற்கு அமைவாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இ.க.நி. இல. 18 | செயற்பாட்டிற்காக தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களை மீள பெறுமதியிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பல ஆண்டுகளிற்கு முன்னர் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டு முடிந்த சொத்துக்கள் தொடர்பில் மீளாய்வாண்டில் அதற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டில் கழிவிடப்பட்ட கடதாசிகளின் விற்பனையிலிருந்து கிடைத்திருந்த ரூபா 1,116,903 வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் தீர்க்கப்படாத முற்பணத் தொகையான ரூபா 1,728,961 இனை பெறவேண்டிய முற்ணமாக காட்டாது கடன்கொடுத்தோரிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் சார்பில் அறவிடப்பட வேண்டிய கடன்கள் மற்றும் செலுத்தவேண்டிய கடன்களாக முறையே ரூபா 5,257,174 மற்றும் ரூபா 4,788,576 கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் தேசியக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்பட வேண்டிய கடன்கள் மற்றும் செலுத்தவேண்டிய கடன்களாக முறையே ரூபா 4,673,863 மற்றும் ரூபா 3,566,223 ஆனமையால் ரூபா 583,311 மற்றும் ரூபா 1,222,353 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.4 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபாரக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 474,810,854 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 396,176 ஆன கடன்பட்டோர்கள் மாத்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்குரிய கடன்பட்டோர் மீதி தொடர்பில் மாத்திரம் மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்ததுடன் 1 ஆண்டிற்கு மேற்பட்ட மீதிகளிற்காக எந்தவொரு கடன்பட்டோரிடமிருந்தும் மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வியாபாரக் கடன்பட்டோர் மீதியான ரூபா 474,810,854 இல் முறையே ரூபா 76,079,850, ரூபா 57,184,740 மற்றும் ரூபா 24,858,601 தொகை 1, 2 மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகளாக இருந்தது.

(இ) விற்பனை நிலையங்களில் 2010 ஆம் ஆண்டின் கடன்பட்டோரிலிருந்து மீளாய்வாண்டில் எவ்விதத் தொகையும் அறவிடப்படாத இருபத்திமூன்று கடன்பட்டோர்கள் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 3,655,380 ஆகும்.

(ஈ) 2006, 2007 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்காக வழங்கப்பட்ட 11 விலைப்பட்டியல்களிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,314,296 தொகை 2011 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 திசெம்பர் 31 இல் தீர்வுசெய்யப்படாத முற்பணங்கள் ரூபா 4,813,153 ஆனதுடன் அதில் ரூபா 1,525,593 இரண்டு ஆண்டுகளிற்கு முன்னர் வழங்கப்பட்ட முற்பணமாகும்.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2000 ஜனவரி 21 ஆந் திகதிய 3/2000 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 10:1 மற்றும் 10:4 ஆம் பந்திகள் | ரூபா 2,799,538 செலவில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக தேவையான முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நிதி திட்டமிடல் அமைச்சின் 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2011 ஜனவரி 1 தொடக்கம் யூலை 31 வரையான காலத்தில் ரூபா 2,799,538 செலவில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக பெற்றுக் கொண்டிருந்த முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | தலைவரின் வதிவிடக் கட்டணமாக 2011 ஆம் ஆண்டில் மொத்தமாக ரூபா 614,787 தொகை 08 சந்தர்ப்பங்களில் தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| | அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 2011 ஆம் ஆண்டில் ரூபா 2,500,000 கூட்டுத்தாபனத்தினால் நன்கொடையாக செலுத்தப்பட்டிருந்தது. |

### 1.2.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கண்டி விற்பனை நிலையத்திற்கு விற்பனைக்காக 2010 நவம்பர் மாதத்தில் விநியோகிக்கப்பட்ட ஏறத்தாழ ரூபா 3,381,000 பெறுமதி கொண்ட புத்தக இருப்பு கண்டி விற்பனை நிலையத்திற்கு கிடைத்திருக்கவில்லை. "இந்த இருப்பு மத்திய மாகாணத்தின் விற்பனை மேம்படுத்தலிற்காக பயன்படுத்திக் கொள்வதற்காக கண்டி விற்பனை நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட

இருப்பாகும் என்றும் விற்பனை மேம்படுத்தலிற்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றமையால் கொள்கல அட்டைகளிற்கு எடுக்கத்தேவையில்லை என்றும்'' தலைவரினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) கண்டி விற்பனை நிலையத்தில் மொத்தம் ரூபா 731,367 பெறுமதியான காசு விற்பனைகளின் 32 விலைப்பட்டியல் பிரதிகளில் கொடுக்கல்வாங்கல் இடம்பெற்ற திகதிகள் குறிப்பிடப்பட்டிராமையால் பணம் காலதாமதமின்றி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டமையை உறுதிப்படுத்த முடியவில்லை. இருந்த போதிலும் அந்த பட்டியல்களினது நிதிப்பிரிவிற்கு கிடைத்துள்ள பிரதிகளில் பணம் கிடைத்த திகதிகள் குறிப்பிடப்பட்டிருந்தமையால் அநேகமான சந்தர்ப்பங்களில் பணம் கிடைத்த மறுதினமே வங்கியில் வைப்புச் செய்யப்பட்டதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 133,688,336 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 92,128,005 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 41,560,331 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான இறுதி இருப்பின் பெறுமதி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தமையால் மொத்த இலாபத்தில் பொருண்மையான வளர்ச்சி காட்டப்பட்டமையே இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் மீதான முக்கியமான தரவுகள் முன்னைய ஆண்டிற்கான பெறுமதிகளுடன் ஒப்பிடப்பட்டு முக்கியமான தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக | | | |
|---|---|---|---|---|
| | 2011<br>ரூபா (000) | % | 2010<br>ரூபா (000) | % |
| விற்பனைகள் | 1,199,585 | - | 985,404 | - |
| விற்பனைக் கிரயம் | 792,849 | - | 654,031 | - |
| மொத்தலாபம் | 406,736 | 33.9% | 331,373 | 33.6% |

| | | | | |
|---|---|---|---|---|
| வருமான வரி | 56,688 | - | 40,086 | - |
| தேறிய இலாபம் (வரிக்குப் பின்னர்) | 77,000 | 6.4% | 52,042 | 5.3 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

விற்பனை மற்றும் உற்பத்தித் தகவல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

3.1.1 விற்பனை நடவடிக்கைகள்

| **விற்பனைகள்** | **2011** | **2010** | **முரண்** | |
|---|---|---|---|---|
| | **ரூபா (000)** | **ரூபா (000)** | **ரூபா (000)** | **%** |
| பாடசாலைப் புத்தகங்கள் | 715,714 | 618,088 | 97,626 | 15.8 |
| வணிக அச்சகங்கள் | 286,237 | 203,545 | 82,692 | 40.6 |
| அப்பியசக் கொப்பிகள் | 166,067 | 141,545 | 24,522 | 17.3 |
| ஏனையவை | 31,567 | 22,226 | 9,341 | 42.0 |

### 3.1.2 உற்பத்தி நடவடிக்கைகள்

| **உற்பத்திகள்** | **2011** | | **2010** | | **முரண்** | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **அலகுகள்** | **ரூபா (000)** | **அலகுகள்** | **ரூபா (000)** | **அலகுகள்** | **ரூபா (000)** | **%** |
| பாடசாலைப் புத்தகங்கள் {பிரதிகள் (000)} | 10816 | 595,021 | 7465 | 535,725 | 3351 | 59,296 | 11.1 |
| வணிக அச்சகங்கள் (வேலைகளின் | 851 | | 723 | | 128 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை) | | | | | | | |
| அப்பியசக் கொப்பிகள் {பிரதிகள் (000)} | 8162 | 124,298 | 7251 | 96,483 | 911 | 27,815 | 28.8 |
| ஏனையவை (பிரதிகள்) | - | - | 1000 | 1,273 | (1000) | (1,273) | - |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் வடமேல் விசேட செயற்திட்டத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3.12 மில்லியன் மீதியினை அறவிடுவதற்கும் விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்த புத்த இருப்பினை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்திற்குப் பொறுப்பாக செயற்பட்ட விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தரினால் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்காத ரூபா 645,245 தொகையினை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியணிக்குரித்தற்ற இந்த இரண்டு உத்தியோகத்தர்களும் கூட்டுத்தாபனத்திலிருந்து பதவி விலகியிருந்தனர்.

(ஆ) உரிய தினத்தில் புத்தகங்களை அச்சிட்டு கையளிக்கப்படாமை, உரிய கிரயங்களுடன் இணங்காமை காரணமாக பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக 2010 ஆம் ஆண்டிற்கு ரூபா 25,945,168 தொகையும் 2011 ஆம் ஆண்டிற்கு ரூபா 28,944,632 தொகையுமாக ரூபா 54,889,800 மொத்தமான தண்டப்பணம் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சங்கராஜ மாவத்தை இருப்புக் களஞ்சியம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில் காணப்படுகின்ற இருப்புக்கள் மற்றும் அதனங்கள் சம்பந்தமாக காப்புறுதிப் பாதுகாப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 5 விற்பனை நிலையங்களின் வாடகை உடன்படிக்கைகளை நாளதுவரைக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்தின் அப்பியாசக் கொப்பிகளின் விற்பனைக்கான ரூபா 10,000 இற்கு மேற்பட்ட கட்டளைகளின் போது வாடிக்கையாளர்களிற்கு 40% கழிவு வழங்கப்படுவதுடன் எஞ்சிய 60% கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக் கிரயம் மற்றும் இலாபத்தினை உள்ளடக்குகிறது. இதன் மூலம் இலாபத்தின் பெரும் பகுதி வெளியாரிற்கு சென்றடைவதுடன் கூட்டுத்தாபனத்திற்கு மிகச் சொற்பமான இலாபமே கிடைக்கிறது. “ தனியார் நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபன உற்பத்திகளின் விலைகள் அதிகமென்றும் கழிவு வீதத்தில் மாற்றங்கள் செய்யப்படுமாயின் அது கூட்டுத்தானத்தின் உற்பத்திகளிற்கு காணப்படும் கேள்விக்கு பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் இலாபத்தில் கூடிய சதவிதமொன்று வெளியாரிற்கு சென்றடைவதனை தவிர்க்க முடியாதுள்ளது என்றும்” இது தொடர்பில் தலைவரினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) காசு விற்பனைக்காக பின்பற்றப்படுகின்ற இந்தக் கழிவு முறை மத்திய மாகாணத்தின் வாடிக்கையாளர் ஒருவரிற்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வந்திருந்தது. 2011 திசெம்பர் 31 இல் அவரிடமிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 2,188,401 ஆனதுடன் பணத்தினை சேகரித்தலில் இடர் காணப்படும் சந்தர்ப்பங்களில் அதற்கு முகம் கொடுப்பதற்காக பாதுகாப்பு பிணையொன்றையேனும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சௌம்யமூர்த்தி தொண்டமான் நிலையத்திற்கு புத்தக இருப்பொன்றை அச்சிடுவதற்காக ரூபா 5,397,603 பெறுமதியான கட்டளையொன்றைப் பொறுப்பேற்று ஏறத்தாழ ரூபா 1,900,000 முற்பணத் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. கட்டளையின் ஒரு பகுதியாக ரூபா 1,440,805 பெறுமதி கொண்ட புத்தக இருப்பொன்று அச்சிட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,030,875 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் மேலட்டைகள் அச்சிடப்பட்டு ஓராண்டிற்கும் மேலாக களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

## 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏறத்தாழ ரூபா 5,075,327 பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளின் இருப்பொன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத நிலையில் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது.

(ஆ) உற்பத்திசெய்த புத்தகங்கள் விற்பனை செய்யப்படாது விற்பனை நிலையக் களஞ்சியங்களில் வைத்திருக்கப்பட்டதுடன் கம்பஹ மற்றும் கண்டி விற்பனை நிலையங்களில் மாத்திரம் இவ்வாறு வைத்திருக்கப்பட்டிருந்த இருப்புக்களின் பெறுமதி முறையே ரூபா 827,300 மற்றும் ரூபா 520,065 ஆகும்.

### 3.4 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் சர்வதேச புத்தகக் கண்காட்சியில் ஏற்பட்டிருந்த ரூபா 227,656 காசுக் குறைவினை தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 544,337 மொத்தமான இருப்புக் குறைவினை பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடாது அப்பெறுமதியில் ரூபா 322,132 புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 222,205 இனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

கூட்டுத்தாபனத்தின் 11 ஊழியர்கள் பொதுசன ஊடக தகவல் அமைச்சிற்கும் மேல் மாகாண சபைக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சம்பளமாக ரூபா 1,917,670 தொகையும் மேலதிக நேரப்படியாக ரூபா 238,968 தொகையுமாக ரூபா 2,156,638 தொகையொன்று மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தாபன முகாமையாளர் எனும் பெயரில் பதவியொன்றை உருவாக்கி நபர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் ரூபா 30,000 வீதம் படியொன்றும் ரூபா 40,0000 மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனமொன்றும் வழங்கப்பட்டிருந்தது. மேலும் தனிப்பட்ட உதவியாளர் எனும் பெயரிலான பதவிக்கும் நபர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்பட்டு மாதாந்தம் ரூபா 20,000 வீதம் படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. கட்டிடங்களின் பேணுகை மற்றும்

சுற்றாடல் அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு இந்தப் பதவிகள் உருவாக்கப்பட்டதாகவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கிகாரத்திற்காக சமாப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதிய 26/2010 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக 106 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு 2011 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா 19,565,586 செலுத்தப்பட்டிருந்தது. ‘‘முறைப்படியான அங்கீகாரத்துடன் பதவியணியினை சேர்துக் கொள்ளும் வரை தேவையான செயற்பாடுகளை செய்வதற்காக மாத்திரம் குறைந்தபட்டசம் ஒப்பந்த, தற்காலிக மற்றும் நாளாந்தச் சம்பள அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் முறையாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்றும்’’ தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகி 04 ஆண்டுகள் கடந்திருந்தும் அப்பதவியினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கண்டி விற்பனை நிலையத்தில் மிகையான பதவியினர் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் ஒப்பந்த அடிப்படையில் 08 பேர், தற்காலிக அடிப்படையில் 03 பேர்களுமாக 11 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விற்பனை வருமானம், இருப்புக்கள் தொடர்பான பொறுப்பு மற்றும் விற்பனை நிலையத்தின் சகல நடவடிக்கைகளும் சம்பந்தமான பொறுப்புக்கள் தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

## 3.7 வாகனப் பயன்பாடு

---------------------------------

குழு வாகனங்கள் 18, உத்தியோகத்தர்களிற்கு ஒதுக்கிய வாகனங்கள் 05 மற்றும் அமைச்சிற்கு இணைக்கப்பட்ட வாகனங்கள் 02 என்ற வகையில் 27 வாகனங்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக காணப்பட்டன. கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டவாறு உத்தியோகத்தர்களிற்காக ஒதுக்கப்பட்ட 02 வாகனங்கள் தொடர்பில் ரூபா 211,944 பெறுமதியான எரிபொருள் ஏற்பாடுகளிற்கு முரணாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டுத்தாபனம் 2009-2013 காலப்பகுதிக்கு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் நாளதுவரையாக்கிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான சகல இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் இலக்கிடப்பட்ட உற்பத்தியின் அளவினையும் பெறுமதியினையும் பாட்டத்தக்கவகையில் மாத்திரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய செயல்நடவடிக்கைத் திட்டம் பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படுவதற்கான இயலுமை பலவீனமடைந்திருந்தது.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

கூட்டுத்தாபனத்தின் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2011 மே 26 ஆந் திகதியன்றே அங்கீகரித்திருந்தது.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான மீதிகளிற்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பெறவேண்டிய கணக்குகள்

(இ) முற்பணங்களைத் தீர்த்தல்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) நிதிக் கட்டுப்பாடு

(ஊ) இருப்புக் கட்டுப்பாடு

(எ) உள்ளகக் கணக்காய்வு